பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 08 2024 Tuesday 12 40Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்ம் இயக்கம் சுதந்திரத்தின் பெருமையை பிரதிபலிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளது.
- நாட்டின் பொருளாதாரத்தில் மீன்வளத்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 44 ஆயிரத்து 125 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு மாநில அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா இந்தியாவில் தங்கியிருப்பதால் இருநாட்டு உறவுகள் பாதிக்கப்படாது என்று பங்களாதேஷ் கூறியுள்ளது.
- போலந்து சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இன்று பங்கேற்கிறார்.

>>>>><<<<<

சுதந்திரத்தின் பெருமையையும், வளர்ச்சியடைந்த பாரதம் என்னும் இலக்கை நோக்கிய நாட்டின் செயல்பாட்டையும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் பிரதிபலிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கம் தொடர்பான இருசக்கர வாகன பேரணியை இன்று காலை அவர் புதுதில்லியில் தொடங்கி வைத்து பேசினார்.

கோடிக்கணக்கான இந்தியர்களின் பங்கேற்பின் மூலமாக, இது ஒரு மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

75வது சுதந்திர தினத்தின் போது இல்லந்தோறும் தேசியக்கொடியை ஏற்றும் வகையில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டதை திரு. ஜெக்தீப் தங்கர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், மூவர்ணக் கொடி நாட்டில் உள்ள அனைவரையும் ஒன்றிணைப்பதாக தெரிவித்தார்.

இதில் மத்திய அமைச்சர்கள் திரு கிரண் ரிஜிஜு, திரு. மன்சுக் மாண்டவியா, திரு. ராம்மோகன் நாயுடு ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணி மேஜர் தியான்சந்த் மைதானத்தில் நிறைவடைந்தது.

>>>>><<<<<

78-வது சுதந்திர தின கொண்டாட்டங்களை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே ஆற்றும் உரை, அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் நாளை மாலை நேரடியாக ஒலிபரப்பாகிறது.

இதனையடுத்து, நாளை இரவு மணி 7.15-க்கு ஒலிபரப்பாகும் ஆகாஷவாணி செய்தி அறிக்கை இரவு 8 மணிக்கு ஒலிபரப்பாகும்.

குடியரசுத்தலைவர் உரையின் தமிழாக்கம், இரவு மணி 9.30-க்கு ஒலிபரப்பப்படும்.

சுதந்திர தினத்தன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி செங்கோட்டையில் கொடியேற்றும் நிகழ்வு, காலை 7 மணியிலிருந்து நேரடி ஒலிபரப்பு செய்யப்படும்.

ஆகாஷவாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் நேரடி ஒலிபரப்பை நேயர்கள் கேட்கலாம்.

இதனையடுத்து, காலை மணி 7.15-க்கு ஒலிபரப்பாகும் ஆகாஷவாணி செய்திகள் பிரதமர் உரைக்கு பின்னர் இடம்பெறும்.

பிரதமரின் சுதந்திர தின உரையின் தமிழாக்கம் அன்றிரவு மணி 9.30-க்கு ஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழக முதலமைச்சரின் சுதந்திர தின செய்தி 15ஆம் தேதி இரவு 7 மணிக்கு ஒலிபரப்பாகும்.

>>>>><<<<<

78வது சுதந்திர தினத்தை அமைதியாகவும், சுமுகமாகவும் கொண்டாடும் வகையில், ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது தேவையற்ற நிகழ்வுகளை தடுக்கும் வகையில், அங்கு வழக்கத்திற்கு மாறாக பாதுகாப்பு முன்னேற்பாடுகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஸ்ரீநகரில் நடைபெறும் சுதந்திர தின கொண்டாட்டத்தில், துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா தேசியக்கொடியை ஏற்றுகிறார்.

>>>>><<<<<

மீன்வளத்துறை முன்னேற்றத்தில் விண்வெளி தொழில்நுட்பம் முக்கியப் பங்காற்றுவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

மீன்வளத் துறையில் விண்வெளி தொழில்நுட்ப பயன்பாடு குறித்த தேசிய கருத்தரங்கை புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் பொருளாதாரத்தில் மீன்வளத்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக கூறினார்.

மீனவர்களை பாதுகாக்கும் நோக்கில், மீன்பிடி கப்பல்களில் ஒரு லட்சம் டிரான்ஸ்பான்டர்களை பொருத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மீனவர்கள் கடல் எல்லையை அறிந்து கொள்ளும் வகையில், இந்த டிரான்ஸ்பான்டர்கள் எச்சரிக்கை விடுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள 3 கோடி மீனவர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியாவில் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா தங்கியிருப்பதால் இருநாட்டு உறவுகள் பாதிக்கப்படாது என்று பங்களாதேஷ் வெளியுறவு ஆலோசகர் திரு. Mohammed Touhid Hussain தெரிவித்துள்ளார்.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவுடனான சுமுகமான உறவுகள் தொடர்ந்து நீடிக்க, பங்களாதேஷ் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இதற்கிடையே, அந்நாட்டில் நிகழும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சிறுபான்மை சமூகத்தினர் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை தடுக்கும் முயற்சியில் அரசியல் கட்சிகள் ஈடுபட வேண்டும் என்று உள்துறை அமைச்சகத்தின் ஆலோசகர் ஓய்வுபெற்ற Brigadier General Sakhawat Hossain வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

பேரிடர் கால பாதிப்புகளை ஒளிபரப்பு செய்யும் போது, வீடியோ பதிவு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தை குறிப்பிட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தனியார் தொலைக்காட்சிகளை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பேரிடர் பாதிப்பு நேரிட்ட முதல் நாளன்று எடுக்கப்பட்ட பதிவுகளை அடுத்தடுத்த நாட்களில் ஒளிபரப்புவதால், பார்வையாளர்கள் தேவையற்ற குழப்பத்தையும், அச்சத்தையும் எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் 44 ஆயிரத்து 125 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு மாநில அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச்செயலகத்தில் இன்று நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணத்தின் போது முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, காற்றாலை மின்சக்தி, எண்ணெய் சுத்திகரிப்பு, பசுமை எரிவாயு போன்ற பல்வேறு துறைகளில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

2030ஆம் ஆண்டுக்குள் பசுமை எரிவாயுவை 20 ஆயிரம் மெகாவாட் கொள்திறன் அளவுக்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அரசு மற்றும் தனியார் ஒத்துழைப்புடன் கூடிய திட்டங்கள், அரசு மற்றும் பொதுத்துறை ஒத்துழைப்புடன் கூடிய திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுடனான கூட்டு ஒத்துழைப்பின் பேரில் நீர்த்தேக்கங்களை அமைப்பதற்கான கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

24 ஆயிரத்து 700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 15 திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், தலைமைச்செயலர் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றர்.

>>>>><<<<<

தரமான கல்வியை வழங்குவதில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசிய அளவில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த பல கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றிருப்பது பெருமை அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

கோவை, சூலூரில் நடைபெற்று வரும் தரங் சக்தி பன்னாட்டு விமானப் பயிற்சி நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ராணுவத் தளவாட மற்றும் போர் விமானக் கருவிகளின் கண்காட்சி இன்று தொடங்கியது.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, இந்த கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

விமானப்படை தளபதி ஏர்ஷீப் மார்ஷல் வி.ஆர். சௌத்ரி, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் திரு. சமீர் வி காமத் உள்ளிட்டோர் இக்கண்காட்சியை பார்வையிட்டனர்.

சுதந்திர தினத்தன்று இந்த கண்காட்சியை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட — ஹரிகரன் 41 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தேனி மாவட்டம், சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை எட்டியதை அடுத்து, அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதையடுத்து, வராக நதி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் 34 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள ஐந்தாவது நேரடி கருத்து பரிமாற்ற நிகழ்ச்சி தற்போது இணையவழியில் நடைபெற்று வருகிறது.

இந்நிறுவனத்தின் பல்வேறு சேவைகள் குறித்த விழிப்புணர்வை உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படுத்தும் நோக்கில் இது நடத்தப்படுகிறது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியை மாற்றிக் கொள்ளுதல், அதற்கான நடைமுறைகள் தொடர்பான கேள்விகளுக்கு நிபுணர்கள் அளிக்கும் பதில்கள் இந்த நிகழ்ச்சியில் இடம்பெறும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்திருந்தது.

>>>>><<<<<

போலந்து சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இன்று சுவிட்சர்லாந்தின் Dominic Stricker-ரை எதிர்கொள்கிறார்.

>>>>>END<<<<<